# எங்கள் அப்பா



கௌரி சண்முகலிங்கன்

பீதாம்பரம் சபாரத்தினம்

அவர்களின் நினைவேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பா

கௌரி சண்முகலிங்கன்

சாங்கனை
34, ஆஸ்பத்திரி வீதி
மட்டக்களப்பு
19.02.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைப் படுவாய் மனமே! கேள்
விண்ணின் இடிமுன் விழுந்தாலும்,
பான்மை தவறி நடுங்காதே,
பயத்தா லேதும் பயனில்லை;
யான்முன் னுரைத்தேன் கோடிமுறை,
இன்னும் கோடி முறைசொல்வேன்,
ஆன்மா வான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே.

- பாரதி

---

**Engal Appa**

by Ms Gowri Shanmugalingan

First Edition : 19.02.2007

© Sabaratnam Srikanthan

Printers: Unie Arts (Pvt) Ltd.

Publishers: Nagalingam Noolalayam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

திருவாக்கும் செய்கருமங் கைக்கூட்டும் - செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலார் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே

## திருவாசகம்

யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச்
சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் அருள்பெறுநாள்
என்றென்றே வருந்துவனே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன்அடியின் கீழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

மதியால் வித்தகனாகி மனதால் உத்தமனாகி
பதியாகி சிவஞான பரயோகத்தருள் வாயே
நிதியே நித்தியமே என் நினைவே நற் பொருளாயோய்
கதியே சொற்பரவேளே கருவூரிற் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

எல்லாம் சடுதியில் முடிந்தன.

ஆஸ்பத்திரியில் காந்தனும் நானும் அப்பாவைப் பார்த்து வந்து 'அப்பா நலமாக இருக்கிறார், முகத்திலே வழமையான மலர்ச்சி நாளைக்கு நீங்கள் கதைக்கலாம்' என் கௌரிக்கு சொன்ன அந்தநாள் வராமலேயே போய்விட்டது. சின்னவயதில் அப்பாவை இழந்த எனக்கு 'அப்பா' என்றழைக்க கிடைத்த பேறும் முடிந்தது. நேரில் வந்து பார்க்கவும் முடியாத காலக் கொடுமையில் கௌரிக்குக் கொஞ்சமாவது அமைதியைத் தரும் என்ற எங்களின் வேண்டுதலில் **எங்கள் அப்பா** என்ற இந்த நூல் உருவானது.

வழமையான கல்வெட்டு மரபிலிருந்து புதிதான வடிவமைப்பில் இந்நினைவேடு அமையப்பெற்றுள்ளது. கௌரியின் எங்கள் அப்பா நூலின் வழி, அப்பாவின் மேன்மைக ளோடு செழுமையான எங்கள் பாரம்பரியத்தின் வாழ்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சுக்களும், உன்னதங்களும் காக்கப்படும் என்பது எங்கள் அசையாத நம்பிக்கை.

இந்நூலை அழகாக விரைவாக வெளியிட துணை யுனிஆட்ஸ் நிறுவனத்தினருக்கு என்றும் அன்புடையோம். அப்பாவின் சடங்குகளில் கலந்தும் எங்கள் துயரில் இணைந்தும் நின்ற உங்கள் எல்லோருக்கும் எங்களின் அன்பான நன்றிகள்.

அப்பாவின் பாதகமலங்களில் இந்நூல் அர்ப்பணம்.

**பேராசிரியர் மனோ சபாரத்தினம்**

அதிபர், நாகலிங்கம் நூலாலயம்,

இல.134, புதிய கல்முனை வீதி,

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**19.05.1921** **20.01.2007**

அமரர்

# உயர்திரு. பீதாம்பரம் சபாரத்தினம்

அவர்கள்

திதி வெண்பா

ஆண்டு வியவதனி லானதொரு தையினிலே
பூண்டுவரு பூர்வபக்க துதியையிலே – நீண்ட புகழ்
சேரும் சபாரத்தினம் சென்றடைந்தான் அம்மைபதம்
ஊருறவு அத்தனையும் விட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடக்கவுரை

நெஞ்சத் திரையில் நீங்காத நினைவுகள் எண்ணற்றவை; அவற்றுள் என்றும் பசுமையான சிலை எழுத்துக்களாய் உள்ளவை சிலவே. அந்த சிலவற்றுள் சபாரத்தினம் ஐயா அவர்களின் பொன்னான பசுமையான நினைவுகளை நினைத்துப் பார்க்கிறேன்.

நான் ஐயாவுடன் பழகிய காலங்கள் சிறிதாயினும் அவரிடமிருந்து அறிந்து கொண்ட விடயங்கள் அளப்பரியன. நான் மட்டுமல்ல யாராயிருந்தாலும் அவரிடம் சென்றவுடன், 'வாருங்கள் இருங்கள்' என்றுதான் அழைப்பார். மாலையில் ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலய வழிபாடு முடிந்ததும் அவரை சென்று பாராமல் வீடு திரும்ப மாட்டேன்.

**ஐயா உங்களிடம் நான் கற்றுக் கொண்டது ஆயிரம் ஆயிரம். இனி ஆலோசனைக்காக யாரிடம் செல்வேன். உங்களிடமுள்ள சமய பக்தியையும் சோதிடத்தினையும் யாரிடம் காண்பேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிற்கேற்ற ஆசானாய் சமூகம் போற்றும் சேவையாளனாக புகழ்மாலை சூடிய ஐயா அவர்களை இழந்து தவிக்கும் அனைவருக்கும் ஆறுதல் கிடைக்க இறைவனை வேண்டுகிறேன்.

வெள்ளை வேட்டியுடனான கம்பீரமான தோற்றமும் அவரின் முகத்திலிருந்து வரும் புன்சிரிப்பும், கதைகளும் என்னால் மறக்க முடியாதன. எனக்கு ஏதும் கஷ்டங்கள் வந்தால் அவரிடம் சென்று கூறியவுடன் எனது நட்சத்திரத்தையும் இராசியையும் பார்த்து 'இனி உனக்கு நல்ல காலம் ஒன்றும் பயப்படத் தேவையில்லை புதன் திசை தொடங்குகின்றது' என்று மன ஆறுதல் கூறி அனுப்பிவைப்பார். எங்களுக்கு ஆறுதல் தரும் ஐயா, இன்று எம்மோடு இல்லை.

மரணத்தால் மக்கள் மறக்கப்படுகிறார்கள் அவர்களுள் சிலர் மரணத்தால் நினைக்கப்படுகின்றார்கள். அவர்களுள் நான் பழகிய சபாரத்தினம் ஐயா மிகவும் மேன்மையுள்ளம் கொண்டவர். ஐயாவின் நினைவுகளை எழுதும் கௌரி அக்காவின் 'எங்கள் அப்பா' என்ற இந்நூலுக்கான தொடக்கவுரையை எழுதக் கிடைத்த வாய்ப்பினை ஒரு பேறாகவே கருதுகின்றேன்.

ஐயாவின் நினைவுகளை இந்நூல் என்றென்றும் காத்திருக்கும் என்பது திண்ணம்.

**ம.சச்சிதானந்தசிவம்**
தலைவர்
ஸ்ரீசித்திவிக்னேஸ்வரர் ஆலயம்
ஆனைப்பந்தி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பா

'தாத்தா சுகங்கா ...! '

அப்பாவிடம் சுகம் கேட்கும் மகள் அம்பிகையின் வழமையான மழலை அது...

'நல்ல சுகம், பா ... ய்....'

அம்பிகையோடு அப்பா பேசிய அந்த வார்த்தையே எங்களுடனான அப்பாவின் தொடர்பாடலின் இறுதி வார்த்தையானது. வழமைக்கு மாறான அப்பாவின் 'பாய்' நிரந்தரமான ஒரு பிரியாவிடைக்கான அறிவிப்பாகுமென சற்றேனும் நாம் நினைத்ததில்லை. அன்றைய பொழுதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு உரையாடும் போது, 'சின்ன ஒப்பரேசன்தான்; இரண்டு நாளிலை வீடு வந்திடுவன் நீங்கள் ஒண்டும் யோசிக்காதை யுங்கோ... இப்பதான் சிவதொண்டன் ஆருத்திரா அபிஷேக விபூதி வந்ததெண்டு தம்பி கொண்டுவந்து பூசினவர்; இந்த நேரத்திலை சுவாமியும் என்னை நினைச்சிருக்கிறார்...' என எவ்வளவு நம்பிக்கையோடு அப்பாவின் குரல் ஒலித்திருந்தது...

'ஒப்பரேசன் நல்லா நடந்து, இன்று வாட்டிற்கும் அப்பாவை கொண்டு வந்தாச்சு, இனி அப்பாவோடு பேசலாம்' என இருந்த வேளையில்தான் இடியென அந்த சேதிவரும்...

சூழமைவின் நெருக்கடிகளிடை, சின்ன அரசியலின் கொடுங்கரங்களில் அப்பாவைச் சென்று பார்க்கும் வழி அடைக்கப்பட்டிருந்தோம். சடுதியில் நேர்ந்த மறைவுக்குப் பின் இறுதிப் பிரியாவிடையை நேரில் சென்று தரவும் இயலாத பாவிகளானோம்...

அப்பா நினைவாக சாமியறையில், சுவாமியின் பாதார விந்தங்களுக்கு முன்னால் ஏற்றிய குத்துவிளக்குக்கு முன்னால் அவர் நினைவுகளுக்குள் கரைவதே இன்றைய எங்கள் இருப் பானது.

அந்த வெளிச்சத்திலேயே எங்கள் அப்பாவின் நினைவுகளை மீட்டும், காக்கும் இந்தத் தேடல்....

தமிழின் தேசத்தின் பாரம்பரிய கிராமங்களில் ஒன்றாய் இன்றும் தன் கிராமத்து அழகை காத்து நிற்கும் சுதுமலை, அப்பாவின் பிறப்பிடமாகும். முன்னைப் பழமைக்கும், பின்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைக்கும் களமான சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய மருங்கில் வளமான வயற்பரப்பை யண்டி அப்பாவின் பிறந்தகம்.

சுதுமலை அம்பாள் ஆலயத்தின் ஆதித்தாய் வழிபாட்டு மையத்தினை சூழ நிறைந்த ஆலமரம்போல, அப்பாவின் வேரும் விழுதுகளும், எங்கள் பண்பாட்டின் செழுமைக்கும் மேம்பாட்டிற்கும் நிழலாய் நிறைந்திருந்தன. வைத்தியம், சோதிடம், சமூகநலம் என விரிந்த வாழ்வியல் புலத்து அப்பாவின் சந்ததித் தடங்கள்.

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் கோவில் பரிபாலக ராகவும் சுதுமலையின் புகழ்பூத்த வைத்தியபரம்பரையில் 'பெரிய பரிகாரியார்' என்ற அந்தஸ்துடனும் விளங்கியவர் சின்னத்தம்பி கதிரவேற்பிள்ளை. இவர் மகன் கஸ்தூரிமுத்துக்குமாரு. பெரிய பரிகாரியாரின் சகோதரிக்கும் அந்நாளில் பள்ளிக்கூடவளவில் ஞானோதயவித்தியாசாலையை நிறுவி, கல்விப் பணிசெய்த சந்திரசேகரன் மரபில் உதித்த ஆறுமுகம்பிள்ளைக்கும் நடந்த மணவினையில் பெற்ற மகன் பீதாம்பரம். இவர் அக்காலத்து ஆங்கிலக்கல்வி தேர்ச்சியின் வழியாக, உயர்ந்த பதவிகளில் சமூக முக்கியத்துவம் பெற்றிருந்தார். கச்சேரி உலாந்தாவாக பெரும் புகழுடன் சேவை செய்ததுடன் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக சுப்பிரீம்கோட் யூரியாகவும் அருஞ் சேவை யாற்றியவர்.

இவருக்கும் சுழிபுரம் இராசவல்லவன் மரபில் தோன்றிய விதானை சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் மகள் தங்கமுத்து வுக்கும் நடந்த திருமணத்தில் மூன்று புதல்வர்கள். இவர்களில் இரண்டாவது புதல்வனாக 19.05.1921இல் அப்பாவின் உதயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவர், ஆசிரியராக விளங்கிய இராசா (இராசவேல்). இளையவர், வனபரிபாலன இலாகாவில் கடமையாற்றிய மகாதேவா.

பண்பாட்டின் பூமியிலே அழகாய் அமைந்தது அப்பாவின் இளமை சமூக மயமாக்கம். வயல்வெளிக் காற்றின் வசந்தமும், அந்த வயலை செழுமையாக்கிய மனித உழைப்பின் மகத்துவமும் அப்பாவின் அகமன விரிவுக்கும் கடமையில் அர்ப்பணிப்பான அவர் எதிர்கால மேம்பாட்டிற்கும் நிலைக்களனாகியிருக்கவேண்டும்.

ஆதித்தாய் அம்பாள் வந்து களைப்பாறி பின் நிரந்தரமாக குடியிருக்கும் தெய்வீக மையம் சங்களை. அதுவே அப்பாவை வளர்த்த சூழமைவாகவும் விளங்கியது. எங்கெங்கு சென்றாலும் சங்களை அம்பாளின் அருள் சூழலை தன்னகத்தே பேணிப்போற்றி வந்தார். எங்கள் மட்டக்களப்பு இல்லத்திற்கு **சங்களை** என பெயரிட்டதன் மூலம் அகம் புறம் இரண்டிலும் தன் ஆத்மீகச் சூழலைக் காத்து நின்றார்.

இளமையில் பத்துவயது பராயத்திலேயே தந்தையை இழந்திடும் துயரம் அப்பாவிற்கு. தந்தையின் வயல் நிலப்பரப்புகளில் தொழில் செய்ய பல உழைப்பாளர்கள் இருந்தபோதும் தனது பொறுப்புணர்வின் வெளிப்பாடாக சின்ன வயதிலேயே அந்த தொழிலாளர்களுடன் துலா மிதித்தும், பட்டையால் நீர் இறைத்தும் பாடசாலையால் நடந்து வந்த அந்நாட்களைப் பற்றி பெருமையாகவே அப்பா சொல்வது உண்டு. மாலையில் வீடு திருப்பியபின் கால்களை வருடி தைத்த முட்களை தாயார் தங்கமுத்து எடுத்துவிடும் பொழுதுகள் பற்றிய நினைவில் குழந்தையாய்க் கண் கலங்கி நிற்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கல்வி வரலாற்றின் மேன்மைக்கு களமான கல்விச்சாலைகளில் ஒன்றான திருநெல்வேலி பரமேஸ் வராக் கல்லூரியிலேயே அப்பாவின் பாடசாலைக் கல்வி அமையப் பெற்றது. கல்லூரி அதிபராக இருந்த சேர்.பொன் இராமநாதனின் மருகரான செனற்றர் நடேசபிள்ளையினதும்,ஏனைய நல்லாசிரி யர்களினதும் அன்பான வழிகாட்டல் அப்பாவிற்கு இங்கே கிடைத்தது.

கல்லூரி நாட்களில் புகழ்பெற்ற விளையாட்டு வீரனாக வும் அப்பா விளங்கியிருந்தார். உதைப்பந்தாட்ட அணியின் தலைவராகவும் எங்கள் தேசிய விளையாட்டான தாச்சியணித் தலைவராகவும் தான் பதித்த முத்திரைகளை, வெற்றிகளைப்பற்றி கூறுகின்ற வேளைகளில் அவர் காண்கின்ற உற்சாகத்திற்கு அளவில்லை.

தாயார் தந்த ஊக்கத்துடன் ஆங்கில மொழி வழியான அன்றைய இன்ரர்சயன்ஸ் வகுப்புவரை கற்றுக்கொண்டிருந்த வேளையில் தாயாரின் திடீர் மறைவு அப்பாவின் பாடசாலைக் கல்விக்கான முற்றுப்புள்ளியானது. அம்மா இல்லாமல் கல்வி வேண்டாம் என பாடசாலைக் கல்வியை புறந்தள்ளினார் அப்பா. இதனால் உயர் கல்வியை அப்பாவால் தொடரமுடியாமல் போனது.

அப்பா படித்த கல்லூரி, பின்னர் எங்கள் உயர்கல்விக் கான செழுங்கலை நியமமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக உருப்பெற்று அங்கொரு மாணவியாக நான் பயின்ற காலத்து எனைக்காண வருகின்ற பொழுதுகளில் அன்று தான் படித்த வகுப்புகளைத் தேடியும் தான் விளையாடிய களங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவியும் அப்பா கண்ட மலர்ச்சியில் nostalgia என்ற பதத்தின் முழுமையான அர்த்தத்தை நான் உணர்ந்தேன். என்றால் மிகையில்லை.

தாயின் பிரிவுக்குப்பின் மனம் தளர்ந்து போன அப்பாவுக்கு அன்பான உறவுகள் ஆதரவாகும். மச்சாள் மகேஸ்வரி, அவர் கணவர் அந்நாளின் அரச அதிபரான ஸ்ரீகாந்தா போன்றோரின் அரவணைப்பில் மீண்டும் தொடங்கும் மிடுக்கென அப்பாவின் தொழில் வாழ்வு ஆரம்பமானது. இந்நாட்களில் ஸ்ரீகாந்தா அவர்களின் இல்லத்தில்தான் குருநாதனான யோகசுவாமியின் முதல் தரிசனமும் ஆசியும் அப்பாவுக்குக் கிடைத்தது.

'சேவையரின் மகனா...' என்றபடி தன் தோளிலே தடவியபடி 'படியடா, நல்லாப்படியடா' என்ற சுவாமிகள் அருளாசி தந்த கணத்தையும் அதன்பின்னால் அவரை சந்தித்த ஒவ்வொரு சம்பவங்களையும், அப்பா காரில் சுவாமி பயணித்த பொழுதுகளையும் மெய்சிலிர்க்க பலதடவைகள் அப்பா சொல்லக் கேட்டிருக்கிறோம்.

இறுதிக் கணம்வரை குருநாதன் யோகசுவாமியின் அருளாசி அப்பாவோடிருந்தது. யோகர்சுவாமியின் நற்சிந்தனை களின் வழி ரமணர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்ற ஞானிகளின் ஆத்மீக தரிசனங்களையும் அப்பா தேடிக் கொண்டிருந்தார்.

அந்நாளில் தென்னாசியாவிலேயே சிறந்து விளங்கிய எங்கள் கூட்டுறவுத்துறையின் பரிசோதகராக அப்பாவின் பணி தொடங்கியது. பொல்கொல்ல கூட்டுறவுப் பயிற்சி கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியை முடித்த அப்பாவின் தொழிற்பரப்பு எங்கள் வடகிழக்கின் பாணமை எல்லை வரை தொட்டது. அச்சுவேலி, நீர்வேலி, கிளிநொச்சி, குச்சவெளி, பாணமை, களுவாஞ்சிக்குடி, பொத்துவில், கல்முனை, மட்டக்களப்பு என தமிழின் தேசப்பரப்பெலாம் அப்பாவின் தொழில்வாண்மை பயன் விளைத்தது.

கூட்டுறவுப் பரிசோதகராக அப்பாவின் தொழில் அநுபவம், ரோஜாப்படுக்கையல்ல; பல சந்தர்ப்பங்களில் முட்படுக்கையாக அமைந்ததை அறிவோம்.

ஒழுக்கத்தை உயிராகக் கருதிய அப்பாவின் தொழில் நேர்மை, கூட்டுறவு அமைப்புக்களின் நோக்கினை காத்து வளர்ப்பதாய் அமைந்ததில் வியப்பில்லை. இதுவே அவருக்கு நெருக்கடியான நிலைமைகளையும் விளைவித்தது. ஆனாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பா தவறான கணக்குகளை ஆமோதிப்பவராக இருந்ததில்லை. மிகக் கண்டிப்பானவராக, நடக்கும் ஊழல்களை துணிவுடன் அம்பலப்படுத்துபவராகவே எப்பொழுதும் இருந்திருக்கிறார். அதேவேளை கூட்டுறவு அமைப்பின் பணியாளர்களோடு சகோதர உறவுடன் அவர்க ளின் நன்மைதீமைகளில் கலந்து நல்ல நட்பையும் அப்பாவால் பேண முடிந்தது.

> "எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத் தோடும், சிரத்தையோடும், மனமகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அவ்வாறு செய்து பழகி வந்தால் மனவுறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர, சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆத்ம சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலேயே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்தில் புகுந்து கவலையை உண்டாக்காது."

எனும் யோகசுவாமிகளின் நற்சிந்தனை அப்பாவின் இந்த உறுதி குலையாத தொழில்வாண்மையின் அடிப்படை யானது என்றால் தவறில்லை.

நேர்மையான இந்த வாழ்வின் சமூக வெகுமதி யாகத்தான் அப்பாவை 'ஐயா' என்றே எல்லோரும் அன்போடு அழைக்கும் பெருமை வாய்த்தது.

இந்நாட்களில் தான் அப்பாவின் திருமணம் சித்தன் கேணியில் விக்னேஸ்வரனும் சிதம்பரேஸ்வரனும் கோயில் கொண்டருளும் சூழலில் அமையப்பெற்றது. புவிராஜசிங்க முதலியார் பரம்பரையில் வந்த PWD ஓவசியர் அம்பலவாணர்-சங்கிலியார் தம்பதியருக்கு செல்லம்மா, மகேஸ்வரன், பாலசிங்கம், செல்வநாயகம், பகவதியார், **தங்கம்மா**, புஷ்பநாயகி, செம்பொற்சோதி, கணேஸ்வரன் என ஒன்பது பிள்ளைச் செல்வங் கள். இவர்களில் ஆறாவது பிள்ளையான தங்கம்மா அப்பாவின் வாழ்க்கைத் துணையானார்.

'வாழ்க்கைத் துணைநலனுக்கு வள்ளுவர் சொன்ன அத்தனை இலக்கணங்களுக்கும் இலக்கியமாய் அம்மா அப்பா குடும்ப வாழ்வு அமையப்பெற்றது. பிறப்பிலிருந்தே சைவ உணவுக்காரரான அப்பா கரம்பிடித்த நாளிலிருந்து அம்மாவும் பூரண சைவஉணவுக்காரியானார். இவ்வாறே அனைத்து விடை யங்களிலும் ஒருமுகமான இசைவும் இணக்கமும். ஊரிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் தொடக்கக் கல்வியைப் பெற்ற அம்மாவின் மேல்வகுப்புக் கல்வி எங்கள்பண்பாட்டின் மற்றொரு உயர் கல்விச்சாலையான மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அமையப்பெற்றது. அப்பாவுக்கு பரமேஸ்வராக் கல்லூரி தந்த சமூகமயமாக்கமும், அம்மாவுக்கு இராமநாதன் கல்லூரி தந்த சமூகமயமாக்கமும் இசைவான இந்த இல்லற வாழ்வின் வெற்றிக்கான அடிப்படைகள் என்றால் தவறில்லை.

குருநாதன் யோகர்சுவாமியின் அருளாசி நிறைந்த அப்பாவின் வாழ்வில் அம்மாவின் ஊடாக சாயிநாதனின் அருளாட்சியும் சேர்ந்து கொண்டது. எங்கள் சாமிஅறையில் இருவரின் அழகான பிரதிமைகளும் இடம்பிடித்தன. சுவாமியின் பிறந்தநாளில் அவர் வயதளவில் பிரசாதமாக லட்டினை காணிக்கையாக்கி அம்மா தொடக்கிய வழிபாடு இன்றுவரை தொடரும். கடந்த பிறந்ததினத்தன்றுகூட திருவருள் அன்ரி அனுப்பிய லட்டுப் பிரசாதத்துடன் இந்த ஆராதனையை நடத்தியதாக அப்பா சொன்னார். அம்மா தொடக்கி வைத்த அனைத்து விடயங்களையும் இடையறாமல் தொடருவதில் அப்பா மிகுந்த கவனமாயிருப்பார்.

அப்பா அம்மா இல்வாழ்வின் கனிவாக மூத்த பிள்ளையாக கௌரி, நான் பிறந்தேன். நான் பிறப்பதற்கு முன்னர் ஒரு நாள் கனவில் சின்னக் குழதையாக சுதுமலை அம்பாள் தரிசனம் அப்பாவிற்குக் கிடைத்ததாம். அப்பொழுதே பிறக்கும் பிள்ளையின் பெயரும் தீர்மானிக்கப்பட்டதாம்.

எனக்குப்பின்னால் ஸ்ரீரங்கன், பவானி, ஸ்ரீகாந்தன். சின்ன வயதிலிருந்தே அப்பாவின் மூத்த மகன்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறாமகன் யோகா அண்ணையும் எங்களோடு உடன் வளர்த் தார். இப்பொழுது பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகி நான்கு பிள்ளைகளின் தந்தையுமான யோகா அண்ணை, இன்றுவரை எங்கள் நன்மை தீமைகள் அனைத்திலும் உறுதுணையாய் கூடவே இருக்கின்றார்.

அப்பாவின் தொழிற்புலங்கள் எங்கள் வாழ்விடமாக எங்கள் அனுபவப்பரப்பு விரிந்தது. எங்கெங்கு பணி செய்தாலும் அந்த இடத்தை, மக்களை நேசிக்கும், அந்த மக்களால் நேசிக்கப்படும் அப்பாவின் தொழில் நேர்மையும் அந்த ஊர் சூழமைவோடு இரண்டறக் கலந்துவிடும் அம்மாவின் அன்பு உள்ளமும் அப்பாவின் தொழில் ஊர்களை, எங்களது சொந்த ஊர்களாக்கும். அங்குள்ள கோயில்களெல்லாம் எங்கள் கோயில் களாகும். ஊரைவிட்டு நாங்கள் இடம் மாறினாலும் உறவுகள் தொடரும். எழுபதுகளில் நீர்வேலியில் நாங்கள் இருந்த காலத்தில் தைக் கார்த்திகை நாளில் அம்மா கந்தசாமி கோவிலுக்கு நேர்த்தியாய் கொடுத்த மயில் வாகனமும் அந்த நாள் திருவிழா உபயமும் இன்றுவரை தொடரும். இதுபோலவே நாங்கள் சென்ற, வாழ்ந்த ஊர்கள் அனைத்திலும் எங்கள் வாழ்வின் தடங்கள்.

எங்கள் வாழ்வுக் காலத்தில் ஒரு குறையையும் அப்பா வைத்ததில்லை. 'மூத்த பிள்ளை படித்தால்தான் மற்றப் பிள்ளைகள் பார்த்துக் படிக்கும்' என இடித்திடித்து அப்பா தந்த புத்திமதிகள்... எங்கள் படிப்புப் பழுதாகிவிடுமென்று சொந்தத்தில் தியேட்டர் இருந்தும் தாங்கள் சினிமா பார்ப்பதை இறுதிவரை நிறுத்திவிட்ட அம்மா அப்பாவின் வைராக்கியம். இரவில் நீண்ட நேரம் நான் படிக்கும் வேளைகளில் அதிகாலைப் பொழுதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு தானும் கண்விழித்து எதையாவது வாசித்தபடி அப்பா தந்த ஊக்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகமாணிப் பட்டதாரியாகும் பேறு எனக்காகும். அந்நாட்களில் எனக்கான செலவுப் பணத்தைத் தருவதற்கென ஒவ்வொரு மாதமும் 'காங்கேசன் பஸ்' ஏறி அப்பா வந்துவிடுவார். எங்கள் ஒவ்வொருவரின் ஆர்வத்துறை களை, ஆற்றல்களை அறிந்து எங்களின் ஆளுமை வளர்ச்சிக்கான வசதிகளை நாங்கள் கேட்காமலேயே அப்பா செய்துதந்தார். சங்கீதத்திலே அப்பாவுக்கு நிறைய ஆர்வமும் ஆசையும். இந்த ஆர்வமும் பிடிப்பும் அவரது இளமைக்காலத்து குடும்ப சூழலிலேயே முளைவிட்டிருக்க வேண்டும்.

இன்று யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய இடங்களிலுள்ள இசைவேளாளர் குடும்பங்கள் இலங்கைக்கு வர அப்பாவின் அப்பா, அப்பப்பா பீதாம்பரம் அவர்கள் முக்கியகாரணராக இருந்தாரென இன்றும் ஊர் முதியவர்கள் சொல்வார்கள். திறமைசாலியான வித்துவான்களில் ஒரு சிலருக்கு தங்க நாதஸ்வரம், தவிலை அழகுசெய்யும் பட்டுப் போன்றவற்றை புவனேஸ்வரி அம்பாள் சந்நிதியில் வைத்து பரிசளித்து கௌரவித்த நினைவுகளை அவர்களின் வாரிசுக் கலைஞர்கள் மனம் நெகிழக் கூறக் கேட்டிருக்கின்றோம்.

இசைப்புரவலரான அப்பப்பா வழி, அப்பாவுக்குள் விளைந்த இந்த ஆசையில் நானும் பவானியும் சின்ன வயதிலிருந்தே கர்நாடக சங்கீதத்தை முறையாகப் பயிலும் வசதியைச் செய்துதந்தார் அப்பா. சங்கீத சபையின் 5ஆம் வகுப்புடன் எனது இசைக்கல்வி தடைப்பட்டபோதும் பவானி சங்கீதக் கல்வியில் தேறி, எங்கள் எல்லோருக்கும் முன் சங்கீத ஆசிரியர் தொழில் வாய்ப்பினையும் பெற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தனுக்கு மிருதங்கம் பயிற்றுவிக்கும் அப்பாவின் ஆசை மட்டக்களப்பில் அந்நாளில் ஒரு நல்ல ஆசிரியரைக் காண முடியாமையால் தடைப்பட்டுப் போனது. 'நாங்கள் நாலுபேரும் சேர்ந்து கச்சேரி வைக்கலாம். அப்ப நான்தான் மேடையில் முழுநேரமும் பிசியாயிருப்பேன்' எனது தம்பி ஸ்ரீரங்கன் சொல்லுவான் 'எப்படி' என்று கேட்டால் 'நான்தான் சுருதிப்பெட்டியுடன் இருப்பேனே' என்பான்.

மேடையில் மட்டுமல்ல; எங்கள் வாழ்க்கையிலேயே அவனது நேரம் மட்டுப்பாடாகிப்போன கொடும் துயரம். எங்கள் குடும்பத்தையே அதிர்ச்சியில் உறையவைத்து துயரத்தின் ஆழ் மையத்திற்கு கொண்டு சென்றது.

கொழும்பு, இலங்கை, யேமன் பொறியியல் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த அவன் ஜே.வி.பி. கால காணாமல் போனவர் பட்டியலில் சேர்க்கப்பட்டான். அவனது இந்த சேதியை கேட்ட கணத்திலேயே அம்மாவும் எங்களை திடுமென விட்டுப் போனார்.

அம்மாவின் இந்த திடீர் மறைவில் எல்லாம் தொலைந்த இருட்டில், எதுவும் செய்ய முடியாதவர்களாய் துடித்துக் கிடந்தோம். இனி என்ன வாழ்க்கையென்றிருந்தோம். இந்நிலையில் கொஞ்சம் கொஞ்சமாக அப்பாவே அம்மாவாகியும் எங்களுக்குத் தந்த உயிர்ப்பினில்தான் மீண்டும் எழுந்து கொண்டோம். அப்பாவோடு எங்களுக்கு வாய்த்த அன்பான அயல் வீட்டு உறவுகளான ஜெயந்தியக்கா, சுகந்தி. போன்றோரும் இந்நாட்களில் எங்களுக்கு ஆதரவாக இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் எங்களைப் பள்ளிக்கூடத்திற்கு வழியனுப்பும் இடம் இப்போது அப்பாவுக்கானது. பள்ளிக்கூடத்திலிருந்து மீளத் திரும்பும்போது வழமையான நேரத்திலிருந்து ஐந்து நிமிடம் தாமதமானாலும் வீதி கேற்றுக்கு வந்துவிடுவார் அப்பா.. நாங்கள் வந்தபின்னர்தான் அப்பாவின் மதியச் சாப்பாடு. அம்மா போன பின்தான் அகப்பை பிடிக்கப் பழகிய எங்கள் சமையலை அன்நாளில் எங்களாலேயே சாப்பிட முடிவதில்லை. ஆனாலும் அதனைச் சுவைத்துச் சாப்பிட்டு அப்பா தந்த நம்பிக்கையில் தான் இன்றைய எங்களின் சுவையான சமையல்கள்.

உள்ளுக்குள் அழுதபடி, எல்லா சோகங்களையும் தனக்குள் சுமந்தபடி எங்களைத் தேற்றி எங்களுக்கான நல்ல வாழ்க்கையை அமைத்துத் தருவதை ஒரு தவமாகவே அப்பா கொண்டிருந்தார். அப்பாவின் தவப்பயனாய் எங்கள் வாழ்க்கையும் இனிதாய் நிறைந்தது. சின்ன வயதிலிருந்தே அம்மாவும் அப்பாவும் அருள் தெய்வமாக எங்களுக்குக் காட்டிய ஸ்வாமி சத்திய சாயி விழுமிய கல்வியில் ஈடுபாடு கொண்ட, அந்நாளில் கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியாக விளங்கிய மனோ அக்காவினூடாக என் திருமணம் நிர்ணயமானது. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் பேராசிரியராக விளங்கும் என். சண்முகலிங்கன் என் வாழ்க்கைத் துணையானார். நல்ல ஒரு கல்வியாளரை, நாடறிந்த கலைஞரை மருமகனாகப் பெற்றதில் அப்பாவிற்குப் பெரு மகிழ்ச்சி. தானும் மருமகனும் திருவோண நட்சத்திரம் என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. மருமகன் தன்னை 'அப்பா' என்று அழைக்கின்ற உறவுப் பிணைப்பில் அவரை அறியாத ஒரு நெகிழ்ச்சி. மட்டக்களப்பு தேசியப்பாடசாலையான புனித மைக்கேல் கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றிய நான் திருமணத்தின் பின் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் ஆசிரியரானேன். இக்காலத்து எனது கல்வியியல் மேற்பட்ட டிப்ளோமா கல்வியிலிருந்து கல்வியியல் முதுகலைமாணி (MPhil)வரை நான் கண்ட ஒவ் வொரு உயர்விலும் அப்பாவின் நிறைவான ஆசி உடனிருந்தது. இது போலவே தன் மருமகனின் கல்விசார் உயர்வுகளையும் கலையாக்க படைப்புக்களையும் மனம் மகிழ வாழ்த்தி நின்றார். அப்பாவின் புத்தக அலுமாரியில் மருமகன் எழுதிய நூல்களுக்கு தனியான இடம்; அதில் அவர் கண்ட மகிழ்ச்சி, பெருமிதம் அளவிலாதது.

திருமணமாகி நெடுநாட்களாகக் குழந்தை இல்லையே என்ற எங்கள் ஏக்கத்திடை, தன்சோதிட வாண்மையுடன் 'உனக் கொரு பிள்ளை வருவாள்' என அப்பா தந்த நம்பிக்கை உயர்வானது.

எங்கள் செல்வ மகள் அம்பிகை பிறந்த சேதியில் அப்பா கண்ட பேரானந்தம் எல்லையிலாதது. அம்பிகையை மடி யில் வைத்துக்கொண்டு, தன் வழமையான இராஜாங்க கதிரையில் இருந்தபடி தன்னிடம் வருகிறவர்களுக்கு பெருமையாய் அவளை அறிமுகம் செய்த பொழுதுகள்., அம்மாவின் பிரிவுக்குப் பின் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்ட அப்பா, அம்பிகைக்கான தன் நேர்த்தியை நிறைவு செய்யவென கழுதாவளை பிள்ளையார் கோவிலுக்கு எங்களைக் கூட்டிச் சென்று பொங்கிப் படைத்து ஆராதித்த நாளின் மகத்துவம் ... வரும் வழியில் திருநாவுக்கரசு சைவச்சிறார் இல்லத்துக்கு பேர்த்தி அம்பிகையின் பெயரில் அவர் கொடுத்த அன்பளிப்பு... இனி இந்த நினைவுகளே எங்களுக்கு மிஞ்சும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச்சி பவானியின் திருமணமும் தெய்வ சங்கற்ப மாகவே நிறைவேறும். அமெரிக்காவிலிருந்து வந்த நந்தினியின் அந்த தொலைபேசி அழைப்பில், 'மாமா, நான் கந்தசஷ்டி விரதம் இருந்து உங்களிடம் கேட்கிறேன், எங்கடை குட்டியண்ணாவுக்கு பவானியை மறுக்காமல் தர வேண்டும்' என்பாள். ஜேர்மனியில் பணிபுரியும் பாலகிருஷ்ணன் இரண்டாவது மருமகனாவார். தன் சொந்த மருமகனே மணமகனானதில் அப்பாவுக்குப் பெரு நிறைவு. திருமணத்திற்கு பின் பவானி ஜேர்மனி செல்ல நேர்ந்தது. தூரப் பறந்து சென்றாலும் வாரத்தில் ஒருதரமேனும் அப்பாவுடன் உரையாட அவள் தவறுவதில்லை. அவள் தொலைபேசி அழைப்பு வரப்பிந்திவிட்டால் அப்பா படும் அந்தரத்திற்கும் அளவில்லை. அவ்வாறே பவானி எங்களோடு பேசமுன் அவள் செய்திகளை எங்களுக்குச் சொல்லிவிடுவார் அப்பா.

பவானியின் மூத்தவன் பாவனன் தான் அப்பாவின் முதல் பேரக்குழந்தை. அதற்கு பின்னால் பவித்திரன். ஜேர்மனியிலிருந்து தொலைபேசியூடாக பாவனனும் பவித்திர னும் பாடும் பாடல்களை, ஜேர்மன் மழலையாக அவர்கள் பேசும் வார்த்தைகளையும் புரிந்தவாறு அப்பா உரையாடும் அந்த பொழுதுகள்.......... விடுமுறையில் ஊருக்கு வரும் வேளைகளில் பிள்ளைகளோடு பிள்ளையாக அப்பா மகிழ்ந்து விளையாடிய வேளைகள் இனி எங்கே.......... என சொல்லி அழுவாள் பவானி.

தம்பி காந்தன், வாழைச்சேனை தேசிய காகித தொழிற்சாலையில் தரமதிப்பீட்டு உத்தியோகத்தராக பணி தொடங்கி பின் அதன் தலைமை செயலகத்தில் நிர்வாக பதவி உயர்வு பெற்றான். 'சுவாமியின் ஆசியுடன் நான் இந்த வயதிலும் படித்துக்கொண்டிருக்கிறேன், நீங்களும் படித்து முன்னுக்குவர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்' என அப்பா தந்த ஆசியுடனும், தன் அயரா முயற்சியுடனும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மாணிப் பட்டதாரியாகி, இப்பொழுது கொழும்பு பல்கலைக்கழ கத்தில் சூழலியலில் முதுமாணிப் பட்ட (MSc.) ஆராய்ச்சியை நிறைவு செய்யவுள்ளான்.

காந்தனின் திருமணமும் அப்பாவின் நிறைந்த ஆசியுடன் அமையப் பெற்றது. தற்போது கொழும்பு றோயல் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியையாகப் பணிபுரியும் கல்யாணி மருமகளானார். காந்தன் - கல்யாணி மணவாழ்வின் கனிவாக அப்பாவுக்கு ஸ்ரீகுமரன், ஸ்ரீபிரணவன் என இரண்டு பேரப்பிள்ளைகள். விடுமுறை வந்துவிட்டால் கல்யாணியும் குமரனும் அப்பாவிடம் வந்துவிடுவார்கள். இந்நாட்களில் குமரனின் விளையாட்டுத் தோழனாக அப்பா இருப்பார். நிறைவான தன் வாழ்க்கைப் பயணத்தில் பிரணவனை மட்டும் அப்பா தூக்கி கொஞ்ச கிடைக்கவில்லை; அவனுக்கு பெயர் சூட்டியதும் அப்பாதான். சதா தான் கேட்டுக் கொண்டிருக்கும் ஆனைப்பந்தி பிள்ளையார் மணியோசையிலிருந்து இந்தப் பெயரை அவர் தேர்ந்திருக்க வேண்டும்.

இத்தனை நிறைவான பாக்கியங்களைப் பெற்ற பொழுதிலும் 'எல்லோரும் ஒன்றாய் இல்லையே... ' என்ற ஆதங்கம் என்றுமே எங்களுக்குள்.

"எங்களோடு வாருங்களேன்" என்று அப்பாவை யாழ்ப்பாணம் கூட்டிச் செல்லும் என் முயற்சி இறுதிவரை நிறைவேறவில்லை. அம்மா இருந்த வீட்டில்தான் நான் இறுதி வரை இருப்பேன் என்ற அப்பாவின் உறுதியே நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூர இருந்தாலும் உறவுகளை பேணும் அப்பாவின் பண்புள்ளத்தின் பெறுமதியை தூரதேசங்களுக்கு சென்ற பின்னும் அப்பாவின் உறவுகள் அவரோடு கொண்டிருந்த அன்பான தொடர்புகளின் வழி உணர முடியும். 'நாட்டு சூழல் சரியில்லை நீ இப்ப வராதை' என்று அப்பா சொல்லியும் கேட்காமல் கனடாவில் இருந்து அப்பாவைப் பார்க்க ஈசன் கொஞ்ச நாட்களுக்கு முன் வந்துபோனார். இதுபோலவே அமெரிக்காவிலிருந்து நந்தினியும் ஜேர்மனியிலிருந்து வனஜாவும் அப்பாவைப் பார்க்க வந்தார்கள். நேரில் வரமுடியாது போனாலும் அடிக்கடி அப்பா வோடு தொலைபேசியில் அனைவரும் சுகம் விசாரிக்கத் தவறுவதில்லை.

உண்மையில் 'அப்பா தனிய' என்று எங்களுக்குள் நாங்கள் ஆதங்கப்பட்டாலும், அப்பா என்றுமே தனித்திருந்த தில்லை. செயற்திறனான மூப்பு (active aging) என்ற இன்றைய சமூக மூப்பியலாளர் சிந்தனைக்கு எடுத்துக் காட்டாக அப்பாவின் ஒவ்வொரு கணமும் அர்த்தமுடனே அமைந்திருந்தன.

இந்த வகையில் அப்பாவின் ஆர்வக் கலையாக அவர் தேடி நாடி வளர்ந்து கொண்ட சோதிடக்கல்வி அவரின் உயிர்த் துணையானது. அப்பாவின் நூலகத்தில் பெரும்பான்மை சோதிட நூல்கள்தான். நான் இந்தியாவுக்கு செல்கின்ற ஒவ்வொரு தடவையும் அப்பா என்னிடம் வேண்டி நிற்பதெல்லாம் சோதிட நூல்களைத்தான். நிறைந்த ஆர்வத்துடனும் ஆராய்ச்சி மனோ பாவத்துடனும் இந்நூல்களோடு அப்பாவின் உறவு நிறைந் திருக்கும்.

சோதிடக் கலையை எங்களுக்கும் பயிற்றுவிக்கும் அப்பாவின் ஆசையில் ஒரு நாள் எங்கள் மூவருக்கும் ஏடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கி சில நாள் வகுப்புக்களும் நடந்ததுண்டு. குறிப்பு எழுதக் கூடிய அளவுக்கு மேல் சோதிடக் கல்வியை நாங்கள் தொடராமல் எங்களின் ஏனைய கல்வி செயற் பாடுகள்..... இதில் அப்பாவுக்கு கொஞ்சம் வருத்தம்தான்.

எங்கள் சோதிடக் கல்வி தடைப்பட்டபோதும் இன்று வரை ஆர்வமுடன் பயில வந்த பல மாணவர்களுக்கு தன் அறிவு அனுபவங்களை அப்பா தந்திருக்கிறார். இவர்களில் சிலர் இன்று சோதிடத்தை தம் வாழ்க்கைக்கான வருமானத் தொழிலாகவும் கொண்டிருக்கிறார்கள்.


80 களின் தொடக்கத்தில் மட்டக்களப்பு ஆனைப்பந்தி ராமகிருஷ்ணமிஷன் மகளிர் பாடசாலையில் நடந்த மூன்று நாள் அகில இலங்கை சோதிடமாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை வாசித்தும், சில ஆய்வமர்வுகளுக்கு தலைமை வகித்தும் தன் சோதிட புலமையை அப்பா வெளிப்படுத்தியிருந்தார். அப்பா வின் இந்த சோதிட அறிவை, அனுபவஞானத்தை ஒரு நூலாகக் காணும் எங்கள் வேண்டுதல் இறுதிவரை நிறைவேறாமலே போனது.

தொடக்கத்துடன் நின்று போன அந்த கைடியழுத்துப் பிரதிகள் இன்று அப்பா நினைவுச் சுவடிகளாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்பாவை நாடி தேடி வருபவர்களுக்கு வெறும் காலக்கணிப்பை மட்டும் ஒப்புவிக்கும் சாத்திரக்காரராக இல்லாமல், அவர்களின் உளவளத்துணையாளராக (counsellor), ஆலோசகராகவும் அப்பா விளங்கினார். இதற்கென ஒரு சதந்தானும் அப்பா பெற்றதில்லை. இந்த சோதிட ஆலோசனைக்காக தன்னிடம் வருபவர்கள் பெறுகின்ற மன ஆறுதலும் நம்பிக்கையும் தான் தனக்கான வெகுமதியென்பார் அப்பா.

எப்பொழுதும் அப்பாவைச்சூழ நிறைய நண்பர்கள் கூடியிருப்பார்கள். சைவசித்தாந்தத்திலிருந்து அரசியல் சித்தாந்தங்கள் வரை இவர்களின் ராஜாங்கத்தில் அலசப்படும்.

தமிழர் பாரம்பரியம், தமிழ்த்தேசியம் தொடர்பான அப்பாவின் தெளிவான கருத்தியல் இந்த சங்கமப் பொழுதுகளில் அழகாய் வெளிப்படுத்தப்படும். விடுமுறையில் வந்து நிற்கும் வேளைகளில் நாங்களும் சில பொழுதுகளில் இவற்றில் இணைந்து கொள்வதுண்டு. இவ்வேளைகளில் வீட்டுக்குள் இருந்தபடியே நாட்டு நடப்புக்களையும், பின்புலமான சர்வதேச விவகாரங்களையும் நுண்ணிதாய் அலசும் அப்பாவின் திறனை வியந்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசத்தின் எதிர்காலம் குறித்து அப்பா நிறைந்த கவலை கொண்டிருந்தார். ஆனாலும் நல்லலொரு காலம் நாளை விடியும் என்ற நம்பிக்கையிலும் தளராதிருந்தார். அரசியல் போலவே ஏனைய விடயங்களிலும் அப்பாவிற்கென்று அபிப்பி ராயங்கள், மதிப்பீடுகள் இருந்தன.

எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும் என்ற ஆவலும் தேடலும் அவரின் அசைவியக்கத்தின் அடிப்படை களாயின. இந்த அசைவியக்கத்தின் ஆற்றலில்தான் அத்தனை உறவுகளும் அவரைத்தேடிச் சூழ்ந்திருந்தன. இந்த உறவு வலைப் பின்னலிலிருந்து அப்பாவைப் பிரித்தெடுப்பதனால் அவர் தவித்துப் போவார் என்பதனை நாங்கள் உணர்ந்து கொண்டத னாலும் அவரை ஒரு அளவுக்கு மேல் எங்களோடு வர நிர்ப்பந்திக்க முடியவில்லை. இந்நிலையில்தான் காந்தன் கொழும்பிலிருந்து இடமும் தொழிலும் மாறி சுகாதார அமைச்சில் புதிய நியமனத்தை பெற்று அப்பாவை இறுதிவரை உடனிருந்து பார்க்கும் பேறு பெற்றான்.

எங்களுக்கோ அப்பாவின் இறுதி ஊர்வலத்தையும் காணக் கொடுத்துவைக்காத விதி எழுதப்பட்டது.

இறுதி ஊர்வலம் புறப்படும் வேளை, ஓவென எல்லோரும் கதறியழும் அந்த கணங்களை தொலைபேசி யூடாக எங்களுக்காக்கி ஆறுதலும் சொல்வார் பிரேமா.

அப்பாவோடு பிள்ளையாய் உடனிருந்து கவனித்த அரசம்மா அக்கா தான் வைத்த நேர்த்திகளெல்லாம் பொய்த்துப் போனதை சொல்லிக் கதறுகிறார்.

உள்ளுக்குள் அழுதபடி, வெளியே காட்டிக் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாமல் எல்லோரையும் நிதானப்படுத்தி காரியங்களை நியமம் தவறாமல் நெறிப்படுத்தியபடி மனோ அக்காவும் சச்சியண் ணையும் எங்களையும் ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இன்றுவரை சச்சியண்ணையுடன் குமாரண்ணையும் இராமநாதன் அங்கிளும், மோகனும் காந்தனோடு கூடவே எங்கள் வீட்டிலிருந்து அப்பாவுக்கான அனைத்துச் சடங்கு களையும் பூரணமாக நிறைவு செய்வதில் உறுதுணையாக இருக்கிறார்கள்.

பெரிய ஆள்மாதிரி எங்களைத் தேற்றி எல்லாக் கடமைகளையும் கிரியைகளையும் நிறைவாகச் செய்து முடித்து வந்து, **'இனி மோட்சம் சபாரத்தினம்தான்'** என்று பேச முடியாமல் உறைந்து போகிறான் காந்தன்.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது.......... காலக் கொடுமையில் நேரில் ஆளுக்காள் ஆறுதலாகவும் இருக்க முடியாத அவலத்திடை அப்பாவின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை ஒன்றே எமக்கான ஆறுதலாகின்றது.

அப்பாவுக்கான ஆராதனையில், எங்களோடு உடனி ருந்தும் தூரக் கடல் தாண்டிய தேசங்களிலிருந்தும் அப்பாவின் நெஞ்சுக்கு நெருக்கமான எண்ணற்ற உள்ளங்கள்........

எங்கள் பிரார்த்தனைக்கான மந்திரத்தையும் அப்பாவின் குருநாதனே ஆசியாய் அனுப்பி வைத்திருக்கிறார். செங்கலடி சிவதொண்டன் நிலையத்திலிருந்து காந்தனைத் தேடி அவன் அலுவலகத்திற்குச் சென்று **நமச்சிவாய மாலை**யைக் கொடுத்து அப்பா நினைவேட்டில் இடம்பெற வேண்டியிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அப்பாவின் குருநாதன் கல்லச்சில் பிரதி செய்து கொடுத்து எல்லோரையும் மனனம் செய்து படிக்கச் சொல்லி அருளாணை வழங்கி அப்பா தினம் பாராயணம் செய்த குரு நமச்சிவாயரின் நமச்சிவாயமாலை, இன்று அப்பா நினை வேட்டின் எங்கள் பிரார்த்தனையானதும் அவன் செயலே.

நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கின்றோம்
நாம் அவருடைய தாய்
நமக்குமவருக்குமொரு குறைவுமில்லை
நம்மை அவர் பிரிய முடியாது
முழுதும் உண்மை.

– யோகசுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# நமச்சிவாய மாலை

காப்பு

மந்திர நமச்சிவாய மாலைநான் செப்புதற்குக்
கந்தவே டனக்கு மூத்த கணபதி காப்புத் தானே.

அறைமறை யயனு மாலு மமரரு முனிவர் தாமும்
முறைமுறை வணங்கி யேத்தும் முதல்வனே நமச்சிவாய 1

ஆதியாய் வேத நான்கா யடிமுடி தெரியா வண்ணஞ்
சோதியாய் நிறைவாய் நின்ற துணைவனே நமச்சிவாய 2

இணையடி தேடிக் காணா வேழுல களந்த மாயன்
கணையதா வெயின்மூன் றெய்த கடவுளே நமச்சிவாய 3

ஈட்டிய பொருள்போ லுன்ற னிணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன் மேனி வள்ளலே நமச்சிவாய 4

உமையொரு பாகம் வைத்த வும்பர்க டம்பிரானே
அமைதரு மணியே முத்தே யண்ணலே நமச்சிவாய 5

ஊனுமா யுயிரு மாகி யுள்ளுமாய்ப் புறம்பு மாகித்
தானுவாய்ச் சகத்துக் கெல்லாந் தந்தையா நமச்சிவாய 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபிறப் பதனான் மாழ்கு மென்னுயிர்க் கிரங்கி வந்து
பழுதற வாண்டு கொள்ளும் பரமனே நமச்சிவாய 7

ஏடவிழ் கோதை மாத ரிளமுலை மயக்கப் பட்டு
நீடுத தொழிக்க வல்ல நிழலனே நமச்சி வாய 8

ஐயமேற் றுண்டாய் பாத மன்பிலேன் தலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றுந் தேவனே நமச்சி வாய 9

ஒன்பது வாயிற் கூட்டி லொடுங்குயி ருய்யும் வண்ணம்
பொன்பொதி மலர்ந்தாள் காட்டும் புனிதனே நமச்சி வாய. 10

ஓமெனு மெழுத்தி னுள்ளே யொளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சி வாய. 11

ஔவியம் பேசாவண்ண மடிமையைத் தடுத்தாட் கொள்ளுந்
திவ்விய மணியே முத்தே தேவனே நமச்சி வாய. 12

அக்கினைப் பூண்டு கொண்டே யரியவெண்ணீறு பூசுஞ்
சொக்கனே செக்கர் மேனித் தூயனே நமச்சி வாய. 13

கம்பமார் களிறு ரித்த கச்சியே கம்பா செம்பொன்
அம்பலத் தாடு கின்ற வண்ணலே நமச்சி வாய. 14

ஙகரம்போல் வளைந்து ழன்று நாயினே னுணவு தேடும்
பகரொணா வின்ன றீர்க்கும் பரமனே நமச்சி வாய. 15

சத்தியுஞ் சிவமு மாகித் தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம்
முத்தியே யளிப்பா யாதி முதல்வனே நமச்சி வாய. 16

ஞமனுட னிந்தி ரற்கு நாரணற்கார ணற்குஞ்
சமனுற முதலாய் நின்ற தாணுவே நமச்சி வாய. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடவிய கபால மேந்தி யேழிரண் டுலக மெல்லாந்
தடவியுங் காண வொண்ணாச் சங்கரா நமச்சி வாய. 18

இணங்கிய கமலப் பொற்றா ளிருவரு மேத்தி நின்று
வணங்கவம் பலத்து வாடும் வானவா நமச்சி வாய. 19

தண்டமிழ் முனிவன் றன்னைச் சமமுறத் தென்பாலேவும்
அண்டரோ டயன்மால் காணா வாதியே நமச்சி வாய. 20

நஞ்சணி கண்டத் தானே நதிமதிச் சடையி னானே
கொஞ்சுபச் சிளம்பெண் பாகங் கொண்டவா நமச்சி வாய. 21

பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனுந் தேடிக்
கொண்டுசென் றறியவொண்ணாக் குரவனே நமச்சி வாய. 22

மங்கையோர் பாகம் வைத்து வளர்பிறை முடிமேல்வைத்துச்
செங்கையின் மழுமான் வைத்த தேவனே நமச்சி வாய. 23

இயக்கரு முனிவர் தாமு மிருகரங் குவித்து நின்று
வியக்கவும் பலத்தி லாடும் விமலனே நமச்சி வாய. 24

அரகர சிவனே யென்று மம்பலத் தாடி யென்றும்
பரவுவார் துயரந் தீர்க்கும் பரமனே நமச்சி வாய. 25

இலவிதழ் மடவார் தங்க ளேவலுக் குரிய னாகி
அலமரு மென்னை யாண்ட வமலனே நமச்சி வாய. 26

வளமுறு மங்கை தன்னை மற்றிடப் பாகம் வைத்தே
ஒளிமதிக் கீற்றைச் சூடு மொருவனே நமச்சி வாய. 27

அழகிய முருக னுக்கோ ராறுமா முகமுங் கூர்மை
பழகிய வேலு மீந்த பரமனே நமச்சி வாய. 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையு மூப்பு மில்லா விறைவனே யெம்பிரானே
வளமையாங் கருணை மேன வள்ளலே நமச்சி வாய. 29

அறவனே பாதந் தேடி யன்றிரு வோருங் காணா
இறைவனே யென்னைக் காக்கு மீசனே நமச்சி வாய. 30

அனந்தலி னின்றாள் போற்றியருச்சிக்கு மடியார் தங்கள்
இனந்தனி லென்னை வைப்பா யீசனே நமச்சி வாய. 31

கரியுரி யதனைப் போர்த்துக் கபாலமுங் கையி லேந்தித்
திரிபுர தகனங் செய்து தேவனே நமச்சி வாய. 32

காலனை யுதைத்த காலா காலனை யெரித்த கண்ணா
பாலனைக் கறிய தாக்கும் பரமனே நமச்சி வாய. 33

கிளிமொழி யமுதச் செவ்வாய்க் கெவுரியைப் பாகம் வைத்த
ஒளிமதிச் சடையினானே யொருவனே நமச்சி வாய. 34

கீண்டுவெற் பெடுத்த வீரக் கேடிலா வரக்கன் றன்னை
மாண்டுக விரலா லூன்றும் வள்ளலே நமச்சி வாய. 35

குழைகுமி ழடருங் கண்ணாட் கோதையைப் பிரிந்த போது
பிழை செயு மதனைக் காய்ந்த பிஞ்ஞகா நமச்சி வாய. 36

கூவிள மறுகு தும்பை கொன்றைவெள் ளெருக்கூமத்தை
மேவிய சடையினானே வித்தகா நமச்சி வாய. 37

செங்கையைச் சடைமேல் வைத்துக் கெவுரியைப் பாகம் வைத்தல்
அங்கணா நீதியோசொ லையனே நமச்சி வாய. 38

கோவன் வணங்கிக் கண்ணாங் கேழ்கிளர் கஞ்சஞ் சூட்ட
ஆகியோ டாழி யீந்த வமலனே நமச்சி வாய. 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைச்சிலை மேரு வாகக் கரியமால் பகழி யாக
உச்சிதப் புவித்தே ரேறு மொருவனே நமச்சி வாய. 40

கொற்றவன் றனக்கு முன்னேகுதிரையி லேறிக் காட்டிப்
பொற்றுகிற் கோலாற் கொள்ளும் பூரணா நமச்சி வாய. 41

கோணமா மலையில் வாழுங் கோதிலா வாதி யேநீ
ஆணல்லை பெண்ணு மல்லை யத்தனே நமச்சி வாய. 42

சந்திரன் விளங்குஞ் சென்னித் தலைவனே தம்பி ரானே
இந்திர னிமையோர் போற்று மிறைவனே நமச்சி வாய. 43

காந்தணி முலையா டன்னைத் தண்புன லெனப்பேர்மாற்றி
ஏத்துசெஞ் சடையெம் மானே யிறைவனே நமச்சி வாய. 44

சிரமது கையி லேந்திச் சீரிய முனிவர் தங்கள்
விரகினை யழித்த மேரு வில்லியே நமச்சி வாய. 45

சீதள கமல வாவித் திருநாவ லூரன் றன்னைச்
சாதனங் காட்டி யாண்ட தாணுவே நமச்சி வாய. 46

கத்தவெண் ணீறு பூசிச் சுடலையி னடன மாடும்
அத்தனே யாரூர் வாழு மண்ணலே நமச்சி வாய. 47

சூரியன் துயரந் தீர்த்தாய் தோன்றிமுப் புரத்தைச் சுட்டாய்
ஆரிய வெள்ளி வெற்கி னத்தனே நமச்சி வாய. 48

செஞ்சிலை கையிலேந்திச் சிரித்துமுப் புரமெரித்தாய்
தஞ்சமென் றுனைய டைந்தேன் தாணுவே நமச்சி வாய. 49

சேதன வடிய ரோடு திருப்பெருந் துறையில் வந்து
வாதவூ ரரசை யாண்ட வரதனே நமச்சி வாய. 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவனே யைம்பு லங்க டமைமனஞ் சாரா வண்ணங்
கைவர மருள வேண்டுங் கடவுளே நமச்சி வாய. 51

சொரிமலர்க் கொன்றை தும்பை சொல்லிய வறுகு தாளி
விரிமலர்ச் சடையாய் வெள்ளி வெற்பனே நமச்சி வாய. 52

சோலைசூ ழால வாயிற் சோதியே சமணை மாய்க்கப்
பாலறா வாயி னார்க்காப் பரிந்தரு ணமச்சிவாய. 53

தந்தையுந் தாயு மில்லாத் தாணுவே யாண்பெண்ணல்லாய்
இந்திர னயன்மால் போற்று மிறைவனே நமச்சி வாய. 54

தாதவிழ் கொன்றை தும்பை சங்கொடு தலையுங் கொண்ட
நாதனே வேத மோது நம்பனே நமச்சி வாய. 55

திரிபுர மெரித்த மூர்த்தி தென்னவன் முன்னே முன்னாள்
நரிதனைப் பரிய தாக்கு நம்பனே நமச்சி வாய. 56

தீதிலா வாதவூரர் செய்கைகண் டுளம கிழ்ந்த
நாதனே பரனே வானோர் நண்பனே நமச்சி வாய. 57

துணைவனே யன்பர் தங்க டுன்பறுத் தருளு மூர்த்தி
பணைமுலை யுமையாள் பங்கா பரமனே நமச்சி வாய. 58

தூதுசுந் தரற்காச் சென்ற சோலைசூ ழாரூ ரையா
ஆதியே யரனே வெள்ளி யசலனே நமச்சி வாய. 59

தென்னவனாகக் கூடற் சேர்ந்துசெங் கோல்செ லுத்தி
அந்நகர் தன்னை யாண்ட வமலனே நமச்சி வாய. 60

தேடியே யிருவர் காணாத் திருவடி மனத்துள் யாரும்
நாடியே வணங்க நின்ற நம்பனே நமச்சி வாய. 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையலோர் பாகம் வைத்துச் சடையிலே கங்கை வைத்த
ஐயனே யாரூர் வாழு மண்ணலே நமச்சி வாய. 62

தொல்லுல கெல்லாம் போற்றுஞ் சோதியே சூல பாணி
வில்லென மேரு வாங்கும் வித்தகா நமச்சி வாய. 63

தோத்திரஞ் செய்மா யற்குச் சுடரொளி யாழி யீந்த
ஆத்தனே யடிய ரன்பிற் களியனே நமச்சி வாய. 64

நஞ்சினை யருந்தி மாய னான் முகன் முதலோர் நிற்ப
அஞ்செழுத்துருவ மான வத்தனே நமச்சி வாய. 65

நாரண னலரோ னிந்திர னாடிமுன் வணங்கி நிற்ப
ஆரண மோது கின்ற வாதியே நமச்சி வாய. 66

நிற்பவர் நெறியை நோக்கி நெஞ்சைவிட்டகலா தானே
கற்பனை கடந்த சோதிக் கடவுளே நமச்சி வாய. 67

நீறணி மேனி யானே நிமலனே யமரர் கோவே
ஆறணி சடையி னானே யண்ணலே நமச்சி வாய. 68

நுண்ணிடை மாது பாகா நோக்குவார் தம்மை நோக்குங்
கண்ணுதற் பரனே தேவா கடவுளே நமச்சி வாய. 69

நூபுர பதமா தோடு நுவலருஞ் சபையி லாடும்
மாபுரத் தவர்கள் காலா வானவா நமச்சி வாய. 70

நெஞ்சக மணி லுன்னை நினைவற நினைந்த பேருக்
கஞ்சலென் றருளிச் செய்யு மண்ணலே நமச்சி வாய. 71

நேத்திரத் தன்னால் வேளை நெருப்பெழச் சுட்டுவிட்டாய்
சாத்திர முனிவோர் போற்றுந் தாணுவே நமச்சி வாய. 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைந்துனை நினைப்பார் பாவ நாசம தாக்கி நிற்பாய்
பைந்தொடி பாகங் கொண்ட பரமனே நமச்சி வாய. 73

நொந்தவரிளைத்தோர் தம்மை நொடியளவினில் வாழ்விக்குங்
கந்தரங் கறுத்த மூர்த்தி கடவுளே நமச்சி வாய. 74

நோக்கமுன் றுடையா யென்னை நோக்கியே துரியா தீதத்
தூக்கத்தில் வைப்பதென்றோ சொல்லுவை நமச்சி வாய. 75

நௌவியை யேந்துங் கையாய் நயமுட னடியார் தங்கள்
வெவ்வினை யெல்லாந் தீர்க்கும் விமலனே நமச்சி வாய. 76

பத்தராய்ப் பணிவார் தம்மைப் பதங்கொடுத் தாளுமையா
சுத்தனே வேதஞ் சொன்ன துணைவனே நமச்சி வாய. 77

பாடுவார் மூவர் தம்மைப் பதங்கொடுத் தாண்டமூர்த்தி
தேடுவார் தேடு கின்ற செம்பொனே நமச்சி வாய. 78

பிறையணி சடையினானே பிஞ்ஞகா வடியார்க் கெல்லாங்
குறைவற வாழ்வ ளிக்குங் கொற்றவா நமச்சி வாய. 79

பீடுறப் பூசிப் பார்தம் பெருவினை யறுக்கு மூர்த்தி
ஆடல்சே ரெருதி லேறு மண்ணலே நமச்சி வாய. 80

புகலுறுங் கல்லா லன்பு பூண்டெறி சாக்கி யர்க்குத்
தகவுற முத்தி நல்குந் தாணுவே நமச்சி வாய. 81

பூசுவெண் ணீறுபொங்கப் பொருவிலா வம்மை காண
நேசமோ டாலங் காட்டி னிருத்தஞ்செய் நமச்சி வாய. 82

பெண்ணமு தனையார் நாணும் பெட்புறு வளையுந் தூசும்
எண்ணுறு பலியாக் கொண்ட விறைவனே நமச்சி வாய. 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயுடன் காட்டி லாடும் பிஞ்ஞகா பெரியோர் தங்கள்
தூயநன் மனத்து ளானே சுத்தனே நமச்சி வாய. 84

பையர வணையிற் றங்கும் பாரளந் தோற்குப் பாதி
மெய்யளித் தருள் கூர்ந் திட்ட விண்ணவா நமச்சி வாய. 85

பொசியுறு தேம்பூஞ் சோலைப் புகலியிற் பிள்ளை யார்க்குச்
சகியொளி முத்தின் பந்தர் தந்தவா நமச்சி வாய. 86

போதக மாகி வந்த புன்மைசே ரசுரன் றன்னை
நோதக வுரித்துப் போர்த்த நுண்ணியா நமச்சி வாய. 87

பௌவத்திற் சிலையோ டாழும் படியமண் செய்ய் வப்பர்க்
கெவ்வம தகற்றிப் பேற தீந்தவா நமச்சி வாய. 88

மறுவறு மாதி சைவ மரபிற்சுந் தரர்க்குத் தூதாய்ச்
செறிநிசி பரவை வாயிற் சென்றவா நமச்சி வாய. 89

மான்மழுக் கையிலேந்தி வன்னியோர் பாகம் வைத்தே
ஆன்முது கேறுஞ் சோதி யையனே நமச்சி வாய. 90

மிடற்றினிற் காள கூடவிடத்தினைக் கறுக்க வைத்தாய்
நடத்தினில் விருப்பம் வைத்தாய் நம்பனே நமச்சி வாய. 91

மீனென வந்த மாயன் விழியினை யிடந்து காத்த
ஆனதோர் மேனி நல்கு மண்ணலே நமச்சி வாய. 92

முன்னமே பிரமன் றன்னை முனிந்து ஓர் தலைய றுத்தாய்
என்னைவந் தாண்டு கொள்வா யீசனே நமச்சி வாய. 93

மூர்க்கனாந் தக்கன் வேள்வி முன்பு சென் றழித்து வெற்றி
மார்க்கங்கண் டிட்ட சோதி வானவா நமச்சி வாய. 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலிவிலாத் தவத்தோர் கோப மேலுற முன்னாள் விட்ட
புலிதனை யுரித்துச் சாத்தும் புண்ணியா நமச்சி வாய. 95

மேயபே ருணர்விற் கெட்டா வெளியதா யணுவு மாகி
ஆயசிற் சொரூப மான வண்ணலே நமச்சி வாய. 96

மையுறு குழலாள் கூடன் மங்கையர்க் கரசி யார்முன்
செய்குறு பணிக்கு வந்த தேவனே நமச்சி வாய. 97

மொழிதரு நால்வர் தங்கள் முதுமறைத் தமிழ்ப் பாமாலை
ஒழிவின்றிச் சூடிக் கொள்ளு மொருவனே நமச்சி வாய. 98

மோகினி வடிவங் கொண்ட முகில் வண்ணன் றன்னைச் சேர்ந்து
சோகமி லைய னாரைத் தோற்றியோய் நமச்சி வாய. 99

மௌவலங் குழலார் மோக வலையறுத் துயர்சித் தாந்தச்
செவ்வையா முத்தி யென்று சித்திக்கு நமச்சி வாய. 100

**- குரு நமச்சிவாயர்**

# நமச்சியவாயப் பத்து

அடியவர் மனத்தை நீங்கா அப்பனே கருணை வாழ்வே
வடிவுடை மழுமானேந்தும் வள்ளலே நமச்சிவாய 1

ஆக்கையே கோயிலாக அகஞ்சிவ லிங்கமாக
நீக்கமற் றெங்கும்நிற்கும் நிமலனே நமச்சிவாய 2

இணையடி பணிவார்தம்மை யின்பவீ டடையச் செய்யுந்
துணைவனே சோதிவெற்பே தூயனே நமச்சிவாய 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனே யெம்மைநீங்கா இறைவனே யிமையோர் போற்றும்
வாசமார் கமலபாதா வள்ளலே நமச்சிவாய 4

உள்குவா ருள்ளத்தெல்லாம் உடனிருந் தறியுந்தேவே
கள்ளுலாங் குழலாள்பாகா கடவுளே நமச்சிவாய. 5

ஊமைபோ லிருந்தேயுண்மை யுணருவார் தங்கட்கெல்லாம்
தாய்மைபோ லருளைச் செய்யுஞ் சங்கரா நமச்சிவாய. 6

எண்ணுவா ரெண்ணந்தோன்று மிடமெனப் பெரியோருன்னைத்
திண்ணமாய்ச் சொல்லும்நல்ல தெய்வமே நமச்சிவாய. 7

ஏகம்ப மேவியந்த ஏந்திழை கலக்கந் தீர்த்த
ஏகனே யெல்லாம்வல்ல எந்தையே நமச்சிவாய. 8

ஐயந்தீர்ந் தடியேன்றன்னை யன்றுநல் லூரிலாண்ட
துய்யனே துரியவெற்பே சுந்தரா நமச்சிவாய. 9

ஒன்பதுவாய்த் தோற்பைதன்னில் உயிரடங்கி நிற்கநல்ல
அன்புசெய் தெய்வமேயென் அமுதமே நமச்சிவாய. 10

- **யோகசுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

**அமரர் சபாரத்தினம் ஒரு முழு மனிதர்**

'நாங்கள் யாவரும் உலகுக்கு கடன்பட்டவரே யன்றி உலகம் நமக்குக் கடன்பட்டிருக்கவில்லை என்பதை மறக்க லாகாது. உலகுக்கு ஏதேனும் நன்மை செய்ய வாய்ப்பும் பெறுவதே நமக்குக் கிட்டிய பேறாகும். உலகுக்கு நன்மை செய்வதில் நாம் நமக்கே நல்லது செய்து கொள்கின்றோம்.'

'பெறுபவன் பாக்கியசாலியல்ல; கொடுப்பவனே பாக்கியசாலி'

**– சுவாமி விவேகானந்தர்**

அமரர் சபாரத்தினம் அவர்கள் வாலிபப் பருவத்திலிருந்து தெளிந்த உள்ளத்துடனும் இரங்கிய மனத்துடனும் உலகுக்கு நன்மை செய்து வந்தார். வேதத்தின் ஒரு அங்கமான சோதிடத்தினை துறைபோகக் கற்றார். அதில் உள்ள உண்மைப் பொருட்களை நன்குணர்ந்தார். சித்தர்கள் எந்தளவுக்குச் சோதிடத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை வகுத்தார்கள் என்பதனை நன்குணர்ந்தார். 'எதிராகக் காக்கும் அறிவினாற் இல்லை எதிரவருவதோர் நோய்' என்ற வள்ளுவர் வாக்கு சோதிடத்தின் பயன்பாட்டைக் காட்டுவதாகவே கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் 1981இல் அமைக்கப்பட்ட சோதிட மன்றத்தில் நானும் அமரர் சபாரத்தினமும் ஒன்றுபட்டு நண்பர்களாகச் செயல்படக் கூடிய வாய்ப்பு கடவுளால் எனக்கு கிடைத்தது. அதைத் தொடர்ந்து அகில இலங்கை சோதிட மாநாட்டிலும் பல ஆய்வுகளை அவருடன் சேர்ந்து செய்துள் ளேன். அதனால் அவருக்கு சோதிடத் துறையில் எந்த அளவு ஆழமான அறிவு இருந்தது என்பதை என்னால் உணர முடிந்தது.

பிரபஞ்சத்திலுள்ள எல்லாக் கிரக சக்திகளையும் கவர்ந்திழுக்கின்ற மையமாக மனிதன் இருக்கின்றான். தன்னால் கவரப்படும் அத்தனை ஆற்றல்களையும் இந்த மையத்தில் இணைத்து அவற்றினை மிகப் பெரிய அலை களாக வெளியே அனுப்புகின்றான். அப்படி அனுப்பும் மையமாக யார் இருக்கின்றானோ, அந்த மனிதனே உண்மையான மனிதன். அதாவது முழுமனிதர். அமரர் சபாரத்தினம் அவர்கள் கிரகங் களின் சக்திகளை தெளிவாக உணர்ந்து அவற்றின் சக்தியை தன்னுடைய ஆசார பூசைகளால் பல மடங்காக்கி 'அடைக்கல மெனத் தேடி வருவோர் தமைக்காக்கும் அவனே மகாபுருடன்' என்ற முதுமொழிக்கமைய இனமத பேதமின்றி உலகுக்கு உதவினார். யாரிடமும் எந்த ஒரு பிரதி உபகாரத்தினையும் எதிர்பார்த்ததில்லை. இதனால் அவர் மகாபுருஷனாகத் திகழ்ந் தார்.

உலகில் கோடானுகோடி மக்கள் தோன்றி வாழ்ந்து, மறைகின்றனர். இதனைத்தான் 'புனரபி ஜனனம் புனரபி மரணம்' என்கின்றது வேதாந்தம். பூமியில் பிறந்தவர்கள் எல்லாம் இறக்கின்றார்கள் என்பது தான் பூரணமான உண்மை. அவர்களில் ஒரு சிலர் மட்டுமே பூரணத்துவம் அடைந்து இறைவனுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக்கப்படுகின்றார். இதனை திருவள்ளுவர் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்' எனக் கூறினார். அமரர் பீதாம்பரம் சபாரத்தினம் அவர் களின் வாழ்க்கை வரலாற்றை ஒழுங்காக அறிந்தால் வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்பது நன்கு விளங்கும். நான் கால் நூற்றாண்டுக்கு மேலாக நெருக்கமான தொடர்பு வைத்திருந்தால் அந்த உண்மையை உறுதியாகக் கூறக்கூடியதாக வுள்ளது. அவரின் இறுதிக்கால வாழ்வு முனிவர்கள் எப்படி தபோவனங்க ளில் வாழ்ந்ததாக புராண, இதிகாசங்கள் கூறுவது போன்றே அமைந்துள்ளதை என்னால் உணரமுடிந்தது.

அவர் செய்த தர்மத்தின் சிறப்பினால் அவரது பிள்ளைகள் சிறப்பாகவும், உயர்வாகவும் வாழ்கின்றனர். அவரின் மருமக்களும் உயர்பண்புமிக்கவர்களாகவும் உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்களாகவும் விளங்குகின்றனர். அவரின் மகன் இறுதிக்காலத்தில் அவருடன் ஒன்றாக இருந்து பணிவிடைகள்செய்து இறைபதமடைந்தவுடன் சகல கிரிகை களையும் செயற்பாடுகளையும் உடனுக்குடன் செய்து முடித் தமை ஒரு அற்புதமான நிகழ்வாகும்.

சூக்கும நிலையில் இந்த உலகில் இருந்து அவர் குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள், இந்த நாட்டு மக்களுக்கு ஏற்ற நன்மைகளைச் செய்து ஒன்றாக இருப்பார் என்பது எனது எண்ணம். அதற்கு இறைவன் அருள் புரிவாராக.

**க.கணேசு B.A (Cey), J.P (Whole Island)**
செயலாளர் நாயகம்
சர்வமத சமாதான ஒன்றியத்தின்
பாதிக்கப்பட்ட மக்கள் பணிமன்றம்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என்பின் வா மனமே

அன்பு சிவமென் றருளானர் சொன்னமொழி
என்புருகச் செய்யுமன்றோ
என்பின்னே வாமகனே!

சத்தி சிவமாகித் தன்னிலையில் பிரியாத
வித்தகனைப் போற்றுதற்கு
விரைந்தென்பின் வா மனமே!

நாகலிங்கம் நூலாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org